O/L இலவச வினா-விடை
மீட்டல் வகுப்புகள்
(எல்லாப் பாடங்களும்)
வல் செயல்களினால் சாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக இவ்வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்க.
Bond INSTITUTION JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

A/L விஞ்ஞானக்
கல்விக்கு
யாழ் நகரில் மிகவும்
பாதுகாப்பான சூழலில்
ஒழுங்கான வகுப்புகளுக்கு
அனுபவமும் ஆற்றலும்
வாய்ந்த பட்டதாரி
ஆசிரியர்களைக் கொண்ட
ஒரே நிறுவனம்.
Bond INSTITUTION JAFFNA

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞ புரட்டாதி மீ 19 ஞ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 முஹறம் பிறை 30 (05.10.1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 272

வெலிக்கடை, பூசாவில்

# தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதப் போர் கைவிடப்பட்டது

## கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் வாக்குறுதி

### கொழும்புப் பிரசைகள் குழுவின் உறுப்பினர்கள் குளுக்கோஸ் பருக்கினர்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, அக்டோபர் 5

வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் பூஸா தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் நடத்திய 22 நாள் உண்ணாவிரதப் போராட்டம் வெள்ளிக்கிழமை இரவுடன் கைவிடப்பட்டது.

கொழும்புப் பிரசைகள் குழுவின் தூதுக்கோஷ்டி ஒன்று சிறைச்சாலை ஆணையாளர் எச். ஜான்ஸ் முன்னிலையில் கைதிகள் சார்பில் தெரிவுசெய்து அனுப்பப்பட்ட ஐந்து பிரதிநிதிகளுடன் வெள்ளி இரவு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, இந்த உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது.

கைதிகளின் குறைபாடுகளை எழுத்துமூலம் அரசுக்குச் சமர்ப்பித்து தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக சிறைச்சாலை ஆணையாளர், கொழும்பு பிரசைகள் குழுப் பிரமுகர்கள் முன்னிலையில் கைதிகள் சார்பில் வந்த கொண்ட ஐந்து பிரதிநிதிகளுக்கும் உறுதியளித்தார்.

இந்த உறுதிமொழியை ஐந்து பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டனர்.

இதைத்தொடர்ந்து உண்ணாவிரதமிருந்து வந்த கைதிகளுக்கு குளுக்கோஸ் பருக்கி உண்ணாவிரதத்தை கொழும்புப் பிரசைகள்குழு பிரமுகர்களான ...ஸ பாலசூரியா, திரு. எஸ் தவராசா, திருமதி பெர்டினண்ட் சில்வா ஆகியோர் முடித்து வைத்தனர்.

#### பூஸாவில்

பூஸா தடுப்பு முகாமில் உண்ணாவிரதமிருந்தவர்களும் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். இராணுவக் கூட்டுத் தளபதி சிறில் ரணதுங்க பூஸா சென்று தமிழ்க் கைதிகளின் குறைபாடுகளைக் கவனிக்க தமிழ் இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார் என்று உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து உண்ணாவிரதம் கடந்த வியாழக்கிழமையைக் கைவிடப்பட்டது.

லெப்டினண்ட் இரத்தினசிங்கம் என்பவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கைதானோரில் அமெரிக்கரான சுவாமி தந்திரதேவாவும் ஒருவர்

திருகோணமலை, அக். 5

சாம்பல்தீவு, சல்லி முற்றுகையின்போது ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் அமெரிக்கரான சுவாமி தந்திரதேவா.

இவர் இந்துமத துறவியாக மாறி ஆத்தி கோட்டையில் இந்து ஆலயம் ஒன்றை அமைத்துச் சமயப்பணி புரிந்து வருகின்றார்.

இவர் திருமலை கோட்டை முகாமுக்குக் கொண்டு வரப்பட்ட 48 பேரில் ஒருவர். விசாரணையின் பின்னர் சுவாமி தந்திரதேவா நேற்று மாலை விடுவிக்கப்பட்டார்.

சாம்பல்தீவு, சல்லிக் கிராமங்களில் மனித சஞ்சாரம் மருந்துக்கும் இல்லையாது — இப்படி உதயனுக்குத் தெரிவித்தார் பின்னர் சுவாமி தந்திரதேவா.

(இ-எ-150)

## இந்திய வெளியுறவு செயலாளரை இலங்கைத் தூதர் சந்தித்தார்

புதுடில்லி, அக். 4

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின கடந்த வியாழக்கிழமை இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ஏ பி வெங்கடேஸ்வரனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

இலங்கை அரசு விசேடமாக அனுப்பிய உருவாக்கங்கள் குறித்த சில விளக்கங்களை இலங்கைத் தூதர் இச்சந்திப்பின் போது வெளியுறவுச் செயலாளரிடம் கையளித்தார் என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் இலங்கை அமைச்சர் கா. சிதம்பரம், அரசியல் சட்ட நிபுணர் திரு பாவலிருஷ்ணன் ஆகியோர் சென்னையில் கூட்டணித் தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சுக்களை கடந்த வியாழன் வரை நடத்தினர்.

அதே நேரத்தில் இலங்கை அரசின் இறுதி உருவாக்கங்கள் பற்றிய போராளிகளின் கருத்துக்களை அறிந்து கொள்வதிலும் இவர்கள் சென்னையில் ஈடுபட்டு இருந்தனர்.

(இ - ஐ - எ)

## மக்கள் படை தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 5

மாங்குளத்தில் இராணுவம் மீது மக்கள் படை தாக்குதல் நடத்தியது.

இது தொடர்பாக ஈ.பி. ஆர். எல். எப் விடுத்த அறிக்கை வருமாறு:-

வியாழன் பிற்பகல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## முகாம்களுக்கு மேலதிக சிப்பாய்கள்

வல்வெட்டித்துறை, அக். 5

வல்வெட்டித்துறை, கொண்டமாறு, பருத்தித்துறை இராணுவ முகாம்களுக்கு மேலதிக சிப்பாய்கள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் கொண்டுவந்து சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

நேற்றுக்காலை 6 மணி தொடக்கம் இந்த மூன்று முகாம்களுக்கும் இரு ஹெலிக்கொப்டர்கள் அடிக்கடி சென்றுவரக் காணப்பட்டன.

அத்துடன் சிப்பாய்கள் முகாம்களைச் சுற்றி பனை, தென்னை மரக்குற்றிகளைப் பாதுகாப்புக்காக அடுக்கி வருகின்றனர்.

(இ-160)

### சுபநேரம்

5—10—1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
9 02 முதல் 10 32 வரை
சாதுகாலம்:
04 32முதல் 6 02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்




லெ.... கொழும்பு ... விஞ்சா சனத்துக்கு லாபம், ஆனால் காண்ட்ராக்டர் பாடு சந்தோஷம் தான்; எப்படிப் பார்த்தாலும் ஒரு பக்கத்தால் நஷ்டம் தான்...!

## ஊர்காவலர் சுட்டுக் கொலை

திருகோணமலை அக். 5

கிண்ணியாவில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர், இனந்தெரியாதவர்களினால் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவரின் பெயர் குஞ்சுத்தம்பி முகிதீன் பாவா.

அவரின் மரண விசாரணையை பதில் நீதிவான் நடு

(4ஆம் பக்கம் பார்க்க)

# மண்மூடை அரண் நிறுவ முயன்ற சிப்பாய்கள் மீது

## புளொட் போராளிகள் தாக்கு

யாழ்ப்பாணம், அக். 5

இடிந்த பொலீஸ் நிலையக் கட்டடத்தில் மண்மூடை அரண் அமைக்க முற்பட்ட சிப்பாய்கள் மீது நேற்று "புளொட்" போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

நேற்றுக்காலை எட்டு மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது;

நேற்றுக்காலை எட்டு மணி அளவில் பத்துக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் யாழ் நூலகப்பக்கமாகவும் மாநகரசபைப் பக்கமாகவும் வெளியே வந்து பற்றைகளுக்குள் பதுங்கி இருந்தனர்.

இதனை அடுத்து வேறு சிப்பாய்கள் சிலர் இடிந்த யாழ் பொலீஸ் நிலைய கட்டடத்தின் மேல் தளத்தில் மண் மூடை அரண் அமைக்க முற்பட்டுக்கொண்டிருந்தனர்.

எனினும் புளொட் போராளிகள் இவர்கள் மீது கிரனேட் சிலிண்டர் தாக்குதலை மேற்கொண்டதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். புளொட் போராளிகளின் தாக்குதல்களிலும் மண்மூடை அரண் பக்கம் நின்ற சிப்பாய் ஒருவருக்கு கையில் காயம் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

இதன் காரணமாக

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஈழ ராணுவம் அதிர்ஷ்ட லாபச் சீட்டு நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக். 5

மாதாந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு ஒன்றை இம்மாதத்தில் இருந்து நடத்த இருப்பதாக தமிழ் ஈழ இராணுவம் அறிவித்துள்ளது.

இம்மாதம் 10 ஆம் திகதி முதல் டிக்கட்டுக்கள் விற்பனைக்கு விடப்படும் என்று தமிழ் ஈழ இராணுவம் விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கை வருமாறு:

ஸ்ரீலங்கா அரசினால் நடத்தப்படும் லொத்தர் சீட்டிழுப்பு சுரண்டல் டிக்கட் ஆகியன எமது ஸ்தாபனத்தினால் ஏற்கனவே தடைசெய்யப்பட்டதை மக்கள் அறிவார்கள்

பாதுகாப்பு நிதி என்ற முறையில் தமிழினத்தைக் கொன்றொழிக்க எம்மிடம் இருந்தே நயமாக ஸ்ரீலங்கா அரசு சுரண்டி எடுத்ததே நம் தடை விதிப்பதற்குக் காரணமாகும்

இதன் காரணமாக சில சீட்டு விற்பனையாளர்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கூட சிரமத்துடன் நடத்த வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இவர்களின் பொருளா

(4-ம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது

மட்டக்களப்பு, அக். 5

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொலீஸ் நிலையங்கள், ஆயுதப் படைமுகாம்களின் பாதுகாப்பு தற்போது பலப்படுத்தப்பட்டு படைவீரர்கள் எந்நேரமும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

முகாம்களில் பாதுகாப்புக்கு அடுக்கப்பட்டிருந்த மண்மூடைகள் மீண்டும் புதுப் பொலிவு பெற்றுள்ளன.

முகாம், காவல் நிலையங்களைச் சுற்றி வர உயரமான கம்பி வேலிகள் போடப்பட்டு வருகின்றன.

கற்றுடலில் ஓலைகள் வெட்டப்பட்டு படையினர் மறைவிடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

விமானப்படை முகாமைச் சுற்றிவரவும் மணல் மூடைகள் அடுக்கப்பட்டு வருகின்றன.

(இ - 21)

## 3 நாட்களின் பின் கடைகள் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், அக். 5

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று நாட்களாக மூடப்பட்டிருந்த கடைகள் அனைத்தும் நேற்றுத் திறக்கப்பட்டன.

லொறிச் சொந்தக்காரர்களைக் கண்டித்து கடையடைப்பு நடந்தது தெரிந்ததே.

இதேவேளை தூரஇடங்களுக்கான லொறிச் சேவைகள் தொடர்ந்தும் நிறுத்தப்பட்டுள்ளன.

லொறிச் சேவையை ஆரம்பிப்பது சம்பந்தமான பொதுக் கூட்டம் ஒன்றும் இன்று வட பிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கத்தினாலும் முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியத்தினாலும் கூட்டப்பட்டுள்ளது.

(இ-10)

திருமலையில் 4 நாட்களாக

# 2 கிராமங்களில் குண்டுமாரி

## 8 தமிழர் உயிரிழப்பு

— திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, அக்: 5

திருகோணமலையில் உள்ள சாம்பல்தீவு, சல்லி ஆகிய இரண்டு கிராமங்களில் நான்குநாட்கள் தொடர்ந்து குண்டுமாரி பொழியப்பட்டது.

அதன் விளைவாக அவை ஒரே புகை மண்டலமாகக் காட்சி அளித்தன.

அங்கு நடந்த வான, தரைத் தாக்குதல்களின் விளைவாக எட்டுத் தமிழர் உயிரிழந்தனர்.

கடந்த நான்கு தினங்களாக சாம்பல்தீவு, சல்லிக் கிராமங்கள் மீது ஆயுதப்படையினர் விமான, தரைத்தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இரண்டு கிராமங்களும் ஒரே புகைமண்டலமாகக் காட்சி அளிக்கின்றன. மனித சஞ்சாரமே இல்லை என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையில் சாம்பல்தீவு தமிழ்ப் பாடசாலையில் ஆயுதப்படை முகாமொன்று நிறுவப்பட்டுள்ளது.

ஐந்துநாள் முற்றுகை நாளை திங்கட்கிழமையுடன் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்றும் நாளைமுதல் இக்கிராமங்களுக்கு மக்கள் சென்றுவர அனுமதிக்கப்படுவர் என்றும் பாது

(4ஆம் பக்கம் பார்க்க)

## திராட்சை, தக்காளி விலை திடீர் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், அக். 5

யாழ்ப்பாணத்தில் திராட்சை, தக்காளிப் பழங்களின் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

தூர இடங்களுக்கான லொறிச்சேவை நிறுத்தப்பட்டதே இதற்குக் காரணம்

ஏராளமான தக்காளிப் பழங்களும் திராட்சைப் பழங்களும் சந்தைப் பக்கத்த முடியாத நிலையில் பழுதடைந்துள்ளன.

இதனிடையே மழையும் பெய்து கொண்டிருப்பதால் பழங்கள் மேலும் சேதமடையக் கூடிய சாத்தியம் இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்

(இ - 10)

## ஹட்டனில் வேலை நிறுத்த பயமுறுத்தல் சுவரொட்டிகள்

கொழும்பு, அக். 5

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் பல தடவை பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட மலையகத் தமிழர்களை விடுவிக்காவிட்டால் வேலை நிறுத்தம் செய்யப்படும் இவ்வாறு கூறும் சுவரொட்டிகள் ஹட்டன் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன.

பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட தமிழ்க்கைதிகளை ஒருவரை விடுவிக்காவிட்டால் ஆசிரியர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என்று கூறும் சுவரொட்டிகளும் ஹட்டனில் காணப்பட்டன

சுவரொட்டிகளைப் பொலீஸார் அகற்றினர்.

(இ-எ)

## முக்கிய அறிவித்தல்

1-10-86 இல் இருந்து நடைபெறும் தூரசேவை லொறி ஹர்த்தால் சம்பந்தமான நடவடிக்கைகளை ஆராயும் பொருட்டு சகல லொறி உரிமையாளர்களையும் (5-10-86) இன்று ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு ஹொட்டல் ஞானம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
செயலாளர்
வட-பிராந்திய லொறி போக்குவரத்துச் சங்கம்

செயலாளர்
யாழ்-முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

உலகப் பொருள்கள் ஒவ்வொன்றின் மீதும் உங்கள் மனம் செல்லுவதைக் காணும் போதெல்லாம் உடனே அப்பொருள்களின் நிலையற்ற தன்மையைச் சிந்தித்துக் கடவுளின் மீது மனத்தை நிலைநிறுத்த முயற்சி செய்!

— அன்னை சாரதாதேவி


# உதயன்

உண்மை - திடசாலை - நடுநிலைமை

இல 15 அவது ஒழுங்கை தொலைபேசி 24305
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம், 05-10-1986 த பெ. இல 33


## எங்கே போகிறோம்---?

யாழ்ப்பாணத்தில் நடந்த காந்தி ஜயந்தி இனக் கூட்டத்தில் பேராசிரியர் திரு ஞ நேசையா தெரிவித்த கருத்து, கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

இன்றைய விடுதலைப் போராட்ட காலத்தில், வெகுஜனப் போராட்டம் எதிலும் இணையாது, இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு ஓடுவது வெட்கக் கேடானது.

இவ்வாறு திரு. ஞ நேசையா கருத்துத் தெரிவித்திருக்கிறார்

அண்மைக்காலச் சரித்திரத்தில் ஈழத் தமிழ் மக்கள், எப்போதும் இல்லாதவாறு, மிகவும் நெருக்கடியான காலத்தில், இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உரிமைகள் அற்ற அடிமைகள் என்ற நிலையில் இருந்து விடுதலை பெற்ற சுதந்திர மனிதர்களாக மாற வேண்டும் என்ற உத்வேகம் அவர்களுக்கும் பிறந்துள்ளது

அரசியல், ஆட்சி அடக்கு முறைகளை அனுபவித்து அவற்றின் அநியாயத்தையும், அக்கிரமத்தையும் உணர்ந்தவர்களாக, அவற்றிலிருந்து விடுபட வேண்டும் என்ற வேட்கை மிக்கவர்களாகத் தமிழர்கள் விளங்குகிறார்கள்

ஆனால் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான பல குணாம்சங்களை அவர்களிடம் காணமுடியவில்லை என்பது துரதிஷ்டமே.

தாம் உண்டு, தம் குடும்பம் உண்டு. உறவு உண்டு தமது வசதிகள் உண்டு என்று தொடர்ந்தும் குறுகிய வட்டத்தில் இருக்கவே ஒரு சாரார் விரும்புகிறார்கள்.

மண்ணின் விடுதலைக்காகத் தமது வசதி நிறைந்த வாழ்க்கையைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற உணர்வு இன்னும் பலரிடம் வளரவில்லை.

ஆயுதப்படையினர் அட்டூழியங்களில் இருந்து தப்புவதற்காக என்ற காரணத்தைக் காட்டிப் பலரும் வெளிநாடு சென்று விட்டார்கள். தொடர்ந்தும் சென்று கொண்டே இருக்கிறார்கள்.

இவர்களில் பலர் நிலைமை சீரான பின்னர் இங்கு வருவதற்கு எண்ணம் கொண்டவர்களே!

தாயகத்தின் மீட்சிக்காக, மக்கள் விடுதலைக்காக ஒரு சிறு பகுதினர் மட்டும் கஷ்டப்பட்டு உழைத்து அதனைப் பெற்றபின்னர், தாம் அந்த விடுதலையை அனுபவிக்கக் காத்திருப்பவர்களே நம்மிற் பலர்.

நமக்கு விடுதலை வேண்டும் எனின் நாமே அதற்காக உழைக்க வேண்டும் மற்றவர்கள் அதனை வாங்கித் தர அனுபவிப்போம் என்று ஒதுங்கி நிற்பது வெட்கக் கேடானது. கோழைத்தனமானது. சுயநலம் மிக்கது

இளைஞர்களில் ஒரு பகுதியினர் மட்டும் தமது உயிர்களைத் துச்சமென மதித்து மண்ணுக்காகப் போராட, ஏனையோர் வெளிநாடு செல்வது என்ன விதத்தில் பொருத்தமானது? அது எந்த வகைத் தேசப்பற்று? எந்தரக விடுதலை வேட்கை?

தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவோரும், வெளிநாடுகளுக்கு ஓடும் தமிழ் இளைஞர்களும் இது குறித்து சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் பெரும் வருமானமும், வாய்ப்பு வசதிகளும் உடைய தொழில்களை நாடி வெளிநாடு செல்லும் வைத்தியர்களும், பொறியியலாளரும், கணக்காளர்களும், கல்விமான்களும் இது குறித்து நினைத்துப் பார்க்க வேண்டும்

அவர்கள் இந்த மண்ணில் பிறக்கவில்லையா? இந்த மண்ணின் மைந்தர்கள் இல்லையா? இந்த மண்ணுக்கு ஆற்ற வேண்டிய பணி அவர்களைச் சேரவில்லையா? கிடைக்கவிருக்கும் உரிமைகளை அனுபவிப்பதில் உள்ள ஆர்வம், ஆசை அதனைப் பெறுவதற்காக உழைப்பதில் குறைந்து போவது - இல்லாமல் போவது ஏன்? நாட்டுப் பற்று அவர்களுக்கு மட்டும் புற நீங்கலா?

அரசாங்க அடக்கு முறைக்கு எதிராகப் போராடுவது மட்டும் தான் உரிமைப் போராட்டம் என்பதல்ல பொருளாதார, சமூக கலை உரிமைகளுக்கான போராட்டங்களும் சமசக்தி படைத்தவையே.

அந்த வகையில் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவித போராட்டத்தில் ஈடுபட்டே ஆக வேண்டும்.

நான் எந்த வகைப் போராட்டத்திலும் சேர முடியாதவன் என்று எவர் ஒருவரும் பின்னிற்கக் கூடாது ஏதாவது ஒரு போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும் ஏதோ ஒரு வகையில் நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்ற உணர்வை ஒவ்வொரு தமிழனும் தனது மனதில் வளர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே நாம் உரிமை நிறைந்த மக்களாக எழுந்து நிற்க முடியும். இல்லையேல் வீழ்ந்து போவோம். இது சர்வ நிச்சயம்.

வெளி நாட்டுக்குப் போவதால் எமது மண்ணின் பண பலத்தைப் பெருக்கலாம் என்று குதர்க்கம் பேசும் பலரைக் காண்கிறோம், அது வெறும் மாயை வெளிநாடுகள் எமக்கு நீண்ட காலத்துக்குச் சோறு போடா.

எல்லாப் பக்கங்களாலும் கதவுகள் மூடப்பட்டு வருகின்றன

எமக்குக் கை கொடுப்பது எமது மண் தான் தற்காலிகமாக ஒரு சிலருக்கு வேறு நாடுகள் சோறு போடலாம். ஆனால் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு...? அவர்கள் எங்கே போவது...?

# பாதுகாப்பு நடவடிக்கை வலுப்படும்

## ராஜீவ் அறிவிப்பு

புதுடில்லி, அக். 4

பிரமுகர்கள் மட்டுமின்றி அனைவரின் உயிரையும் பாதுகாக்க உள்துறை அமைச்சரகம் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

இவ்வாறு பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்

பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில் அரசு வெற்றியடையும் போதெல்லாம் பயங்கரவாதிகள் மீண்டும் தாக்குதலில் தீவிரமாக இறங்குவது தவிர்க்கப்பட வேண்டும். இத்தகைய சட்டத்தை நாடு கடந்தாக வேண்டும்.

இதே சமயம் முக்கிய பிரமுகர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு போதாதென்று பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் அடல்பிஹாரி வாஜ்பேயி குறை கூறியுள்ளார்

பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு பஞ்சாப்பின் எல்லைப்புற மாவட்டங்களில் பாதுகாப்புப் பகுதியை உருவாக்க வேண்டும் எனவும் வாஜ்பேயி சொன்னார் (ஒ)

### ஆர்ப்பாட்டம்

டாக்கா, அக் 4

பங்களாதேஷில் எதிர்ச்சியாளரின் ஆர்ப்பாட்டத்தால் 10 பேர் உயிரிழந்தனர் 4 பேர் பலத்த காயமடைந்தனர் (ஒ)

## வெளி உலகில்

### லஞ்சக் குற்றம் மறுப்பு

கேப்டவுன், அக் 4

தென் ஆபிரிக்காவிற்கு எதிரான பொருளாதாரத் தடைகளுக்கு எதிராக லஞ்சம் வழங்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு மறுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட் சபை உறுப்பினர்கள் தெரிவித்த இந்தக் குற்றச்சாட்டை தென் ஆபிரிக்க வெளிநாட்டமைச்சர் பிக்போத்தா மறுத்தார். (ஒ)

### தவறான செய்தி மறுக்கப்பட்டது

திரிபோலி, அக் 4

கேர்னல் கடாபியின் ஆட்சியை கவிழ்க்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக அமெரிக்க பத்திரிகைகளில் திட்டமிடப்பட்டே தவறான செய்தி பிரசுரிக்கப்பட்டதென்பதை வெள்ளை மாளிகை மறுத்துள்ளது.

ஆனால் ஏனைய நாடுகளின் தவறான தகவல்களைத் தெரிவிக்கும் பிரசாரம் நடத்தப்பட்டிருப்பதை வெள்ளை மாளிகை நிராகரிக்கவில்லை. (ஒ)

### அரசாங்க நிறுவனங்கள் விற்பனைக்கு

மணிலா, அக். 4

பிலிப்பீன்ஸில் சுமார் 163 அரச நிறுவனங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

அரசின் தனியார் மயப் படுத்தும் திட்டத்தின்படி இதனை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டது.

இதன் மூலம் எழுநூறு கோடி டாலரைப் பெற முடியும் என நம்பப் படுகிறது.

ஆறு வங்கிகளும், ஹோட்டல்களும் தேங்காய் எண்ணெய் ஆலைகளும், உணவு உற்பத்தி நிறுவனங்களும் மற்றும் சில கம்பனிகளும் விற்பனைக்கு விடப்படும்.

இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் மணிலாவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மாநாட்டிற்கு அழைக்கப்படுவார்கள். (ஒ)

## ஜோர்தானிய வங்கி இஸ்ரவேல் பகுதியில்

அம்மான், அக் 4

இஸ்ரவேலின் வசமுள்ள ஜோர்தானின் மேற்குக் கரையில் முதன் முறையாக ஜோர்தானிய வங்கியொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது

இதற்கான இரகசியப் பேச்சு வார்த்தைகளை லண்டனில் இஸ்ரவேலும் ஜோர்தானும் மேற்கொண்டன.

யுத்தத்தில் ஈடுபட்டுவரும் இருநாடுகளும் இவ்விதமான உடன்படிக்கைக்கு சம்மதம் தெரிவித்திருப்பது இதுவே முதல்தடவையாகும் (ஒ)

## டெஸ்மண்ட் டுட்டுவை வரவேற்ற வெள்ளையர்

கேப்டவுன், அக் 4

அதி மேற்றிராணியார் டெஸ்மண்ட் டுட்டுவிற்கு தென் ஆபிரிக்காவில் வெள்ளையின மாணவர்கள் பெரிதும் கல்வி பயிலும் பல்கலைக்கழகம் வரவேற்பளித்தது

கறுப்பு இனத்தவரும் வெள்ளை இனத்தவரும் இணைந்து சுதந்திரத்தைப் பெற முடியும் என டுட்டு உரையாற்றியது சந்தோஷத்துடன் வரவேற்கப்பட்டது

கேப்டவுனுக்கு அருகில் உள்ள ஹெலன்போஸ் பல்கலைக்கழகம் தென் ஆபிரிக்காவின் சிறந்த அரசியல் வாதிகளையும் வர்த்தகப்பிரமுகர்களையும் கல்விமான்களையும் உருவாக்கியுள்ளது. (ஒ)

## வர்த்தக உறவுகள் ஆரம்பித்தன

தெல்அவிவ், அக். 4

இஸ்ரவேலும் ஜப்பானும் வர்த்தக உறவுகளை விருத்தி செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

இரு நாடுகளுக்குமிடையில் பொருளாதார உறவுகள் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என பதில் இரு நாடுகளுமே ஆர்வம் காட்டுகின்றன.

அரபுநாடுகளைப் பகைத்துக் கொள்ளாத வகையில் இஸ்ரவேலுடன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருப்பதில் ஜப்பான் ஏற்படுத்தும் எனவும் அறிவிக்கப்பட்டது. (ஒ)

# எல்லா அமைப்புகளும் சுலபமாக அணுகக் கூடிய அமைப்பு ஈரோஸ்

ஈரோஸ் இயக்கத்தின் புரட்சிகர நிர்வாகக் குழுவின் முக்கிய உறுப்பினர் திரு ஆர். சங்கர்.

ஈரோஸின் இராணுவ நடவடிக்கைகள், சர்வதேச ஒற்றுமை நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கும் திரு. சங்கர் தான் பொறுப்பானவராக இருக்கின்றார்.

திம்புப் பேச்சுக்களில் ஈரோஸ் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட இவர், 'சற்றர்டே ரிவியூ' வார ஆங்கில இதழின் சென்னைச் சிறப்புச் செய்தியாளருக்கு அளித்த பேட்டியின் முதலாவது பகுதி நேற்று சஞ்சிகையில் பிரசுரமாகியது. இரண்டாம் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

கேள்வி: போராட்டத்துக்கு எல்லா விடுதலை அமைப்புக்களும் அடங்கிய ஐக்கிய முன்னணி அவசியம் தேவை. விடுதலை அமைப்புக்களிடையே வலதுசாரி, இடதுசாரி என்று அடையாளம் காணும் தன்மை இருப்பதாகத் தெரிகிறது. கொள்கை உடன்பாடு கொண்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடனும் பார்க்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன்தான் ஈரோஸ் இயக்கம் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாக பொதுவான அபிப்பிராயம் நிலவுகிறது உங்கள் கருத்து என்ன?

பதில்: எந்தப்போராட்டத்துக்கும் இடதுசாரிச் சக்திகளின் ஒற்றுமை அத்தியாவசியம் பல்வகையான அமைப்புக்களின் சரித்திர ரீதியான மாறுபட்ட சூழ்நிலையையும் தற்போதைய அரசியல் — இராணுவ நிலையை உருவாகிய விதத்தையும் வைத்துப் பார்த்தால் வலது, இடது என்ற வேறுபாட்டை எங்கே காண்பது என்பது தெரியவில்லை.

இரண்டாவது, போராட்டத்தின் தற்போதைய கட்டத்தில் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வர வேண்டுமா? என்று நாம் வியப்படைகின்றோம்.

சோஷலிச, மார்க்ஸிய போர்வையில் பிற்போக்குவாத சக்திகள் இருப்பதும் எமக்குத் தெளிவாகப் புரிகிறது

இருக்கும் அமைப்புக்களிலே ஈரோஸுடன் கூடுதலாக அடையாளங் காணப்பட்ட இடதுசாரி நேச சக்தி ஈ.பி ஆர். எல்.எவ் என்பதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் எமக்கு நெருங்கிய தொடர்பு உண்டு அல்லது தெளிவான விளக்கம் உண்டு என்பதில் உண்மை கிடையாது.

ஈழம் தேசிய விடுதலை முன்னணியில் நாம் ஒரு சமநிலையை ஏற்படுத்தவே முயற்சிக்கிறோம். ரெலோவும் ஈ. பி. ஆர். எல். எப் அமைப்புக்கள் ஒரு பக்கத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகள் மறுபக்கத்திலுமான தேஅச்சநிலை. எல்லா அமைப்புக்களும் சுலபமாக அணுகக் கூடிய அமைப்பாக ஈரோஸ் விளங்குகிறது.

சிலவேளை எமது முயற்சிகள் தவறாக விளங்கிக் கொள்ளப்படுகின்றன. ஏனைய அமைப்புக்களின் வேண்டுகோளின் பேரில் நாம் மத்தியஸ்தத்தில் ஈடுபட்டால் கூட இந்த நிலை ஏற்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வை ஏற்படுத்துவதில் தீவிர கருத்து வேறுபாடுகளோ, கஷ்டங்களோ இருப்பதை இது எடுத்துக் காட்டவில்லை.

திட்டவட்டமான முற்போக்கு அணி ஒன்றை காணும் கட்டம் வரும் வரை தற்போதைய சமநிலை நீடிக்க வேண்டும் என்பதையே நாம் வாதித்துக் கொள்கிறோம்.

நாம் ஓர் அங்கீகரிக்கப்பட்ட சக்தியாக வருவதற்கு முன்னர் 'குறைபாடு' முற்போக்கட் டணி ஒன்றை உருவாக்க முற்படின் முற்போக்குச் சக்திகள் அழிக்கப்படலாம்.

கேள்வி: மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கல் செய்வது தொடர்பாக பொது உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளதாக நாம் நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து அறிகின்றோம். எப்படியாயினும் வடக்கு - கிழக்கு இணைப்பு அல்லது கிழக்கில் உள்ள சில பகுதிகளை வடக்குடன் இணைத்து தமிழ்மொழி மாநிலம் ஒன்று அமைப்பது பற்றி உடன்பாடு காணப்படவில்லை உங்களுடைய நிலை என்ன?

பதில்: அதிகாரப்பரவலாக்கல் பற்றி வதந்திகள் உலாவுகின்றன பாரதூரமான விமர்சனங்களும் வந்துள்ளன. கணிசமான அளவு உடன்பாடும் காணப்பட்டுள்ளது. சட்டம் — ஒழுங்கு விஷயத்தில் ஒன்றிரண்டு அம்சங்களைத் தவிர ஏனையவை தீர்க்கப்பட்டாயிற்று என்று திரு. அமிர்தலிங்கம் கொழும்பில் வைத்து ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார். காணிப் பிரச்சினையிலும் அதே நிலைமை தான்.

இந்த விஷயங்களில் ஆதார அம்சங்களில் எல்லாம் உடன்பாடு காணப்பட்டாயிற்று என்று சொல்லப்படுகின்றது

இணைப்பு விஷயம் மட்டும் எல்லைநிர்ணயக் கமிஷனிடம் விடப்படும். அந்தக் கமிஷன் கிழக்கில் உள்ள தமிழ்ப் பகுதிகளை அடையாளங் காணும். இவை வடக்குடன் இணைக்கப்பட மாட்டா என்றும் சொல்லப்படுகிறது

பண்டா - செல்வா ஒப்பந்தத்தின்படி தமிழர் பகுதிகள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுவிட்டன.

தற்போதைய போராட்டமும் தமிழ் பிராந்திய கோரிக்கையும் அந்த ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றை அமுல் நடத்துவதில் தோல்வி கண்டுவிட்டன என்று நாம் சொல்ல விரும்புகிறோம்.

(மிகுதி நாளை)

## சமய சந்திகளில்

### தீப லக்ஷ்மி பூசை

யாழ்ப்பாணம், அக் 5

வண்ணை வடமேற்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து தீப லக்ஷ்மி பூசை நடைபெறும்.

இது இந்த ஆண்டு இடம்பெறும் 13 ஆவது தீப பூசையாகும்.

(இ-எ)



**பொய்யாமொழி**

குறள்:

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.

பொருள்:

தன்மனம் தான் அறிந்த குற்றத்தில் தங்கு வானாயின் வானளவு உயர்ந்த தோற்றம் என்ன பயன் செய்யும்?

## வள்ளுவர் கண்ட கல்வி, செல்வம், வீரம்

நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள் புரட்டாதி மாதம் கன்னி மாதம் இது நடுநிசி காலம் இக்காலம் தெய்வ வழிபாட்டிற்கு மிக உகந்த

**நவராத்திரி சிறப்பம்சம்**

காலம். இந்த மாதம் பூர்வபக்க பிரதமை திதி முதல் உள்ள ஒன்பது இரவுகள் நவராத்திரி.

முதல் மூன்று இரவுகள் வீரத்தை வேண்டித் துர்க்கா தேவியையும் அடுத்த மூன்று இரவுகள் செல்வத்தை வேண்டி இலக்குமியையும். இறுதி மூன்று இரவுகளும் கல்வியை வேண்டிச் சரஸ்வதியையும் வழிபட்டு சக்தி பூஜை செய்வது முறை. ஒன்பதாம் நாள் இரவு ஆயுத பூஜை செய்வது வழக்கம். எல்லோரும் தங்கள் முயற்சிகள் சித்தி பெற புத்தகங்களையும் கருவிகளையும், ஆயுதங்களையும் வைத்து வழிபடுவார்கள்.

பத்தாம் நாள் விஜய தசமி, விஜயம் — வெற்றி, தசம் — பத்து. இத்தினத்தில் வித்தியாரம்பம், வித்தைகள் ஆரம்பித்தல் என்பனவற்றிற்கு மிகச்சிறந்த நாள். இலங்கையில் இந்தப் பத்துத் தினங்களிலும் அழகான பொம்மைகள் அடுக்கி கொலுவைத்து வழிபாடு செய்வது பெருவழக்கு. வட இந்தியாவில் இதை தசரா என்று என்று மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்

வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றின் வள்ளுவப் பெருந்தகையின் கருத்துக்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமுடைத்து.

காட்டுல் ஓடும் முயல் எய்த விழ்த்திய அம்பை ஏந்துவதிலும் பார்க்க யானைமேல் எறிந்து தவறிய வேலைத் தாங்குதல் சிறந்தது

கான முயல் எய்த
அம்பினில் யானை
பிழைத்த வேல்
ஏந்துதல் இனிது

பொருளுக்கோ உரிமைக்கோ இரந்துவாழும் மக்கள் இருப்பின் அந்நாட்டை ஆள்பவன் பரந்து கெட்டு அழிவான்.

இரந்தும் உயிர் வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்.

கற்றவனுக்கு பிறந்த நாட்டைப் போல பிற நாடுகளும் அவன் நாடே ஆகையால் ஒருவன்

அ. சபாபதிப்பிள்ளை

சாகும்வரை கல்லாதிருப்பது ஏன்?

யாதானும் நாடாமல்
ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத
வாறு.

ஆலயங்களில் விஜய தசமியன்று கன்னி வாழை வெட்டுதல் நடைபெறும். இது பராசக்தி மகிடாசுரன் என்ற அசுரனை சம்காரம் செய்வதைக் குறிக்கும் மகிடம் என்றால் எருமை. எருமை மந்தமான முரட்டுத்தன்மையுடைய மிருகம். மனிதனின் எருமைத் தோல் குணத்தை அகற்றுவதே மகுடாசுர சங்காரத்தின் தத்துவம்.

ஐக்கிய நாட்டு சபையினர் ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் ஏழாம் திகதிவரை சர்வதேச சிறுவர் தினங்களாகப் பிரகடனப் படுத்தியிருக்கிறார்கள்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே தமிழர் சிறுவர்கள் தினம் ஒன்பது நாட்கள் கொண்டாடியிருக்கிறார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## யேசுவின் காயங்களை தமது உடம்பிலும் பெற்ற புனித பிரான்ஸிஸ் அசிசியர்

புனித பிரான்ஸிஸ் அசிசியர் தினம் நேற்று ஆகும். இதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.

1182-ம் ஆண்டு இத்தாலிநாட்டிலுள்ள அசிசி என்ற சிறிய நகரத்தில் புனித பிரான்சிஸ் பிறந்தார். இவரின் தந்தை பீட்டர் பெர்னண்டோன். தாயார் பீக்கா அம்மையார்.

இவருக்கு இளமையில் வியாபாரத்தின் மூலம் சேர்ந்த பணத்தை எல்லாம் வெறும் கேளிக்கை



யில் செலவிடுகின்ற பழக்கமும் உண்டு இதனால் நண்பர்கள் பலர் இவருடன் சேர்ந்துகொண்டார்கள்.

இவர் அவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கினார்.

அவ்வேளையிலும் இவரிடம் சில நல்ல குணங்களும் மிளிர்ந்தன பணத்தை வீணாகச் செலவு செய்தாலும் ஏழைகளுக்குத் தானம் செய்வதில் அவர் எப்போதும் ஆர்வம்காட்டி வந்தார். 'ஏழைகளுக்குக் கொடுப்பதை இறைவன் நூறு மடங்காக திருப்பித் தருவார்' எனத் தனக்குள் அடிக்கடி சொல்லிக் கொள்வார். அதேபோல் வாழ்விலும் செயல்படத் தீர்மானம் எடுத்தார்.

ஒருநாள் தன் கடையில் மிக மும்முரமாக வேலைசெய்து கொண்டிருந்தபொழுது அங்கு

**ஞானக்கதிர்**

வந்த பிச்சைக்காரன்மீது கோபமுற்று அனுப்பிவிட்டார் ஆனால் உடனே தான் செய்த தற்கு மனம்வருந்தி அந்த ஏழையிடம் மன்னிப்புக் கேட்டார். தன்னிடத்தில் கேட்பவன் எவனுக்கும் எதையும் ஆண்டவனின் அன்பிற்காக மறுப்பதில்லை என்று அன்றிலிருந்து அவர் உறுதி எடுத்துக்கொண்டார்

இந்த நோக்கிலேயே இறைவன் புனித பிரான்சிஸை அழைத்தார். ஆனால் அவரோ ஒதுங்கிநின்றார். இறைவன் விடுவதாக இல்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

அருட்சகோதரர் எஸ். தொமியாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

